## 2.7 2001–02 – ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.82.00 இலட்சம் ஒதுக்கீடு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.221 நாள் : 05.09.2001

படிக்க:

1. ஊரக வளர்ச்சி (மதி1) துறை அரசாணை (நிலை) எண்.138, நாள்.25.05.2000
2. ஊரக வளர்ச்சி (மதி1) துறை அரசாணை (நிலை) எண்.151, நாள்.19.06.2000
3. ஊரக வளர்ச்சி (மதி1) துறை அரசாணை (நிலை) எண்.257, நாள்.20.09.2000
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.47201/2001/திஅ5/நாள்.02.08.2001
5. அரசாணை (நிலை) எண்.220/ஊரக வளர்ச்சித்துறை/நாள்.05.09.2001

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தை 2000–2001ம் ஆண்டில் செயல்படுத்துவது தொடர்பாக பார்வை 1 முதல் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளில் ஆணை வெளியிடப்பட்டது. 2001–2002ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கான நிதி ரூ.82 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.82 இலட்சம் 2001–2002 நிதியாண்டில் இத்திட்டச் செயலாக்கத்திற்காக பார்வை 5ல் உள்ள அரசாணையில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2. ஊரக வளர்ச்சி இயக்குநர் 2001–2002 ஆம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுமாறு பார்வை 4ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கருத்துரு அனுப்பியுள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்பட்ட கருத்துரு அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

(1) பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் 2000–2001 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடும் தேர்வும் கீழ்கண்ட மாற்றங்களுடன் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினராலும் 2001–2002 ஆம் ஆண்டில் தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.

(1) பெண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டுவதற்காக ரூ.20.00 இலட்சம் (ரூ.2 இலட்சம் ஓ10 கழிவறை வளாகங்கள்) ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(2) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவ, மாணவியர் விடுதி கட்டுவதற்காக ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(3) ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கான மாணவ, மாணவியர் விடுதி கட்டுவதற்காக ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(4) கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டிடம், ஊராட்சி அலுவலகத்துடன் இணைத்து கட்டுவதற்கு ரூ.6.00 இலட்சம்(ரூ.0.60 இலட்சம் ஓ10 கட்டிடங்கள்.) ஒதுக்கீடு செய்ய வேண்டும் இப்பணிக்கு மட்டிலும் இணைப்பில் இனம் 1ல் குறிப்பிடப்பட்டுள்ள தடையிலிருந்து சிறப்பினமாக விலக்கு அளிக்கப்படுகிறது.

(5) மேலே இனம் (2) மற்றும் (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள விடுதிகள் தேவையில்லாத தொகுதிகளில் மேற்படி தொகையினை இனம் (1) அல்லது (4)ல் குறிப்பிடப்படுள்ள இரு பணிகளுக்கும் அவரது தெகுதியில் முன்னுரிமை அடிப்படையில் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.. வேறு எந்தப் பணிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யக்கூடாது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவரது தொகுதியில் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்காக குறைந்தபட்சம் ரூ.50 இலட்சம் கண்டிப்பாக ஒதுக்கீடு செய்ய வேண்டும். மீதமுள்ள தொகைக்கு மேற்கண்ட (அல்லது) தடை செய்யப்படாத இதர பணிகளுக்காவோ சட்டமன்ற உறுப்பினர் அவர் விருப்பப்படி பரிந்துரைக்கலாம்.

**3.** இத்திட்டத்தின் கீழ் பணிகளை சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்து எழுத்து மூலமாக சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கு சென்னை மாநகராட்சி ஆணையரிடமும் மற்ற அனைத்து மாவட்டங்களின் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் தெரிவிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

**4.**காலஅட்டவணை

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு கீழ்கண்ட கால அட்டவணை பின்பற்றப்படவேண்டும்.

| வ. எண் | நடவடிக்கைகள் | குறிப்பிட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்போ |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் இறுதியான பணிகளின் பட்டியல் சென்னை மாநகராட்சி ஆணையருக்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கோ அளிக்கப்பட வேண்டிய நாள் | 15.09.2001 |
| 2. | நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்பட வேண்டிய நாள் | 30.09.2001 |
| 3. | பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட வேண்டிய நாள் | 31.10.2001 |
| 4. | பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய நாள் | 15.11.2001 |
| 5. | பணிகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டிய நாள் | 28.02.2002 |

சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்கண்ட காலஅட்டவணையை கண்டிப்பாக கடைபிடித்து முன்மொழிவுகளை கொடுக்க வேண்டும். ஒரு முறை நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட பணிகளை எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்ய இயலாது. சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்த பணிகளுக்கான இடங்களை நிர்வாக அனுமதி வழங்கும் முன்பு கண்டிப்பாக பார்வையிட்டு பணிகளை மேற்கொள்வதற்கான உரிய இடவசதி மற்றும் பிரச்சினை ஏதும் இல்லாத இடமாக இருப்பதை சான்றிதழ் பெற்று உறுதி செய்யப்பட வேண்டும்.

**6.** இந்த ஆணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.135/ ஜே.எஸ் (எஸ்.எப்) 2001 நாள் 31.08.2001 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**என்.கோவிந்தன்**
அரசு செயலாளர்

## இணைப்பு

2001–2002ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யக்கூடாத பணிகள்.

1. மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களுக்கும், அரசுத் துறைகள், முகமைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் கட்டிடம் கட்டுதல்.
2. வணிக நிறுவனங்கள், அறநிறுவனங்கள், பதிவு பெற்ற சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான வேலைகள் செய்தல்.
3. நீண்டகாலம் பயன்படும் சொத்துக்களை புதுப்பித்தல், தர மேம்பாடு செய்தல் முதலியவைகளுக்கான சிறப்பு பழுது பார்த்தல் பணிநீங்கலாக மற்ற பொது பழுது பார்ப்புப் பணிகளையும் நிர்வாக பணிகளையும் மேற்கொள்ளல்.
4. மானியங்களும், கடன்களும் வழங்குதல்.
5. நினைவுச் சின்னங்களும், நினைவு மண்டபங்களும் கட்டுதல்.
6. இருப்பு செய்யத்தக்க எந்தவிதமான பொருட்களையும் வாங்குதல்.
7. நில எடுப்புக்கும், நில எடுப்புக்கு இழப்பீடு வழங்குவதற்கும் செலவிடல்.
8. அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களின் ஒரு பகுதியாக அமைவது நீங்கலாக தனிப்பட்ட ஒருவருக்கு ஆதாயம் அளிக்கக் கூடிய சொத்துக்களுக்கு செலவிடல்.
9. மத வழிபாட்டு இடங்களுக்குச் செலவிடல்.
10. பேருந்து நிழற்குடை
11. சமுதாயக்கூடம்.
12. கான்கிரீட் சாக்கடைகள் (Road Side Concrete Drains)

**என். கோவிந்தன்**
அரசு செயலாளர்